சொல்லி அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. ஆகவேதான் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பணமாகக் கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள். அந்த நஷ்ட ஈடு பேச்சுவார்த்தை மூலமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு பணமாகவே வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். கே. பழனிசாமி அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

(3) கவன ஈர்ப்பு.

(அ) கரூர் நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

Thiru N. K. PALANISAMY : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, tde continuous strike by the handlcom weavers in Karur weaving factories, numbering more than 3,000 pressing for more wages.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, கரூர் வட்ட நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை குறித்து 27-12-1973 அன்று ஒரு தொழிற் தகராறு எழுப்பியது :—

1. வருகைப் பதிவேடு போடுதல்.
2. எட்டு மணி நேரம் வேலை.
3. விருதி நேரம் சலுகைகள் அளிப்பது.
4. விடுப்பு சலுகைகள் அளிப்பது.

1974 மார்ச் 27] [திரு. க. இராசாராம்]

5. தேசிய பண்டிகை விடுமுறைகள் அறிவிப்பு.

6. வருங்கால சேமிப்பு நிதி.

7. ஐம்பது சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது.

28—1—1974 அன்று திருச்சி தொழிலாளர் அலுவலர் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அவரது அறிவுரையின் பேரில் கரூர் நெசவு நூற்பு ஆலையின் உரிமையாளர் சங்கம் 50 சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது தவிர மற்ற கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தது. 50 சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது குறித்து தொழிலாளர் அலுவலர் 12—2—1974 அன்றும் 20-2-1974 அன்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அவர் ரூ. 50 ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 35 ஊதிய உயர்வும், ரூ. 50-க்கு மேற்பட்டு ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 30 ஊதிய உயர்வும் சிறப்பு ஊதிய உயர்வாக அளிக்குமாறு ஆலோசனை கூறினர். சங்கம் அதற்கு மறுப்பு விடுத்து, 22-2-1974 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது.

25—2—1974 அன்று தொழிற்சாலை உரிமையாளர்களில் ஒருவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர் ஒருவரால் ஊர்வலத்தில் இழுக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார். அதனல் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் மேற்கொண்டு திருச்சி அலுவலரால் 28-2-74 அன்று ஏற்படுத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. 1—3—1974 அன்று மதுரை தொழிலாளர் துணை ஆணையாளர் அவர்களால் மதுரையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் தொழிற்சங்கம் மட்டுமே கலந்து கொண்டது.

இதற்கிடையில் திருச்சி மாவட்ட அலுவலர் குறுக்கீட்டின் காரணமாக சாயத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் (ஏறக்குறைய 1,000 தொழிலாளர்கள்) இடையே 7—3—1974 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன் காரணமாக சாயத் தொழிலாளர்கள் மட்டும் வேலையில் சேர்ந்தனர். திருச்சி மாவட்ட அலுவலர் மேற்கொண்டு நடத்திய பேச்சு வார்த்தையின் காரணமாக கீழ்க்கண்ட ஒப்பந்தம் 18—3—1974 அன்று ஏற்பட்டது. அதன் விவரங்கள் பின் வருமாறு :—

1. ரூ. 49 ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும், ரூ. 50 முதல் ரூ. 99 வரை ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 23 ஊதிய உயர்வும், ரூ. 100-க்கு மேற்பட்டு ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 28 ஊதிய உயர்வும் அளிக்கப்படும்.

2. இந்த ஒப்பந்தம் ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 210 நிறுவனங்களை கட்டுப்படுத்தும். இந்த ஒப்பந்தம் 1—3—74 முதல் ஏற்பட்டு, ஒரு வருடம் வரை நீடிக்கும்.

தொழிலாளர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்தனர்.

(ஆ) மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்ஸாண்டர் திரட் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்சான்டர் திரட் தொழிற்சாலையில் பணி புரியும் 160 தொழிலாளர்கள் 4—2—1974-ம் நாள் முதல் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்வது பற்றியும், அதன் தொடர்பாக சேலம் லேபர் ஆபீசர் சொன்ன ஆலோசனையை கேட்காமல் மேற்படி நிர்வாகத்தினர் பாதி தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதாகக் கூறுவதால் மூன்று தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவது பற்றியும் இதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலை பற்றியுமான அவசரப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தை நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையில் 160 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற 'அலெக்ஸாண்டர் திரட் கம்பெனி' மேட்டூர் அணையில் உள்ள மேட்டூர் பியர்செல் கம்பெனியின் ஒரு பிரிவு ஆகும்.

நான்கு சங்கங்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட ஒரு கூட்டு செயற்குழுவின் மூலம் தொழிலாளர்கள் ஒரு கோரிக்கைப் பட்டியலை நிர்வாகத்தின் பரிசீலனைக்கு கொண்டு வந்தனர்.